Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 297/2022** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW 11** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

Name : விஜயகுமார்

Father/Husband Name : முத்துவேல்

Village :

Taluk :

Calling : தலைமை காவலர்

Religion :

Age : 40

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.12.2025

எதிரி ஆஜர்

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது உத்திரகோசமங்கை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.07.2021 ம் தேதி தேவிப்பட்டிணம் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்த போது மேற்படி காவல் நிலைய குற்ற எண். 228/2021 சட்டப்பிரிவு 302 இதச வழக்கில் சம்மந்தப்பட்ட இறந்த கர்ணன் வயது 60, த/பெ. முனியாண்டி, வடக்கு தெரு, பொட்டகவயல், என்பவரின் பிரேதத்தை காவல் ஆய்வாளரின் பிரேத விசாரணைக்கு பிறகு சடலக்கூறாய்வு செய்வதற்காக வேண்டுகோள் கடிதத்துடன் இராமநாதபுரம் மருத்துவ கல்லூரி மருத்துவரிடம்

பிரேதத்தை அடையாளம் காட்டினேன். சடலக்கூறாய்விற்கு பின்பு இறந்த நபரின் உடலை அவரது மனைவியுடன் உடன்பிறந்த சகோதரரான திருநாவுக்கரசு என்பவரிடம் ஒப்படைத்தேன். பிறகு உடல் உள்ளுறுப்புகள் 20.09.2021 தேதி நீதித்துறை நடுவர் எண். 1 உத்தரவுப்படியும், காவல் ஆய்வாளரின் உத்தரவு படியும், இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து ஒப்புதல் பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். பின்பு 08.10.2021ம் தேதி சம்பவ இடத்தில் கொலை செய்ய பயன்படுத்திய கல், இறந்த நபரின் இரத்தம் படிந்த ஆடைகள், அருகிலிருந்த இரத்தம் படிந்த சிமெண்ட் துகள்கள் மற்றும் இரத்தம் படியாத சிமெண்ட் துகள்கள், இரத்தம் தோய்ந்த துணி ஆகியவற்றை இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் பகுப்பாய்வு செய்ய ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

எத்தனை கற்களை இரசாயன பகுப்பாய்விற்கு ஒப்படைத்தேன் என்றால் ஒரே கல் தான். அந்த கல் இரத்தம் படிந்த கல்லா என்றால் ஆமாம். இறந்த நபர் மேலாடைகள் மற்றும் கீழாடைகள் அணிந்திருந்தாரா என்றால் நான் மருத்துவருக்கு அடையாளம் காட்டும் போது இல்லை. இறந்த நபர் அணிந்திருந்த ஆடைகளை சம்பவ இடத்திலிருந்து தான் கைப்பற்றி எனக்கு கொடுத்தார்களா என்றால் இல்லை, சவகிடங்கிலிருந்து சடல கூறாய்வுக்கு பின்பு மருத்துவர் என்னை ஒப்படைத்தார். இரசாயன பரிசோதனைக்கு நான் ஒப்படைத்த ஆடைகள் கைலி மற்றும் அரை கை சட்டை. அந்த கைலி என்ன நிறத்தில் இருந்தது என்றால் இரத்தம் முழுவதும் இருந்ததால் என்னால் கூற இயலவில்லை. அரை கை சட்டை என்ன நிறம் என்றால் அந்த சட்டை முழுவதும் இரத்தம் இருந்தால் நிறத்தை என்னால் கூற இயலவில்லை. ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது இறந்த நபர் அணிந்திருந்த கீழாடை மற்றும் மேலாடையின் நிறத்தினை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.